**கவனிக்க.-** *2017.08.25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2038 - 2017 සැප්තැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2017.09.22

*2038 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1449* |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | *1448* | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் | |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | |


**கவனிக்க.-** ஒதுக்கீடு சட்டமூலம் 2017, செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2017, ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1447 - B81209 - 5,403 (2017/09)

# மாகாண சபை அறிவித்தல்கள்

## தென் மாகாண மாகாண சபை

*1997 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதிய 975 ஆம் இலக்கமுடைய வர்த்தமானப் பத்திரிகையில் தெமாச/சபை/1/79 உடைய வர்த்தமானி அறிவிப்பின் திருத்தங்கள்*

1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கிராம அபிவிருத்தி சாசனம் தென் மாகாண கௌரவ ஆளுநர் தேசமான நெவில் கனகரத்ன அவர்களால் 1996.10.07 ஆந் திகதி ஜீ/எஸ்.பீ/ஏ21 உடைய படிதத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. அந்த சாசனத்தின் 1997, மே மாதம் 09 ஆந் திகதிய 975 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்போது ஏற்பட்ட அச்சுப்பிழையை கீழ் குறிப்பிட்டவாறு திருத்தப்பட வேண்டும் என்று இதன் மூலம் அறியத் தருகின்றேன்.

அதன் தலைப்பு "1996 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க தென் மாகாண கிராம அபிவிருத்தி சாசன சட்டவரைவு" என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை "1996 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க தென் மாகாண கிராம அபிவிருத்தி சாசனம்" என்று திருத்தப்பட வேண்டும்.

வர்த்தமானி அறிவிப்பில் 1 ஆவது பந்தியில் "இலங்கை தென் மாகாண சபையின் ..................ஆம் இலக்கமுடைய கிராம அபிவிருத்தி சாசனம்" என்பது " இலங்கை தென் மாகாண சபையில் இலக்கம் 01 உடைய கிராம அபிவிருத்தி சாசனம்" என்று திருத்தப்பட வேண்டும்.

வீரசுமன வீரசிங்க,
விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார கிராம அபிவிருத்தி
கலாசார மற்றும் கலை செயற்பாடு, சமூக நலநோம்பு, நல்லொழுக்கம்,
சிறுவர் பாதுகாப்புச் சேவை, மகளிர் விவகார, மற்றும் வீடு பொருளாதார
மேம்பாடு, வீடு மற்றும் கட்டமைப்பு, மனித வலு வேலை வாய்ப்பு அமைச்சு.
தென் மாகாணம்.

தென் மாகாணம்,
2017, ஓகத்து 16.

9 - 430

---

## கிழக்கு மாகாண மாகாண சபை

2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கிழக்கு மாகாண ஒதுக்கீட்டு நியதிச் சட்டம் (குறைநிரப்பு ஏற்பாடுகள்) 2017, ஓகத்து மாதம் 29 ஆந் திகதி சபையில் நிறைவேற்றப்பட்டது என்பதனையும் இதற்கான கௌரவ ஆளுநரின் ஒப்புதல் 2017, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி பெறப்பட்டது என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

எம். சீ. எம். செரிப்(f),
மாகாணசபைச் செயலாளர்,
கிழக்கு மாகாண மாகாண சபை.

மாகாண சபைச் செயலகம்,
கிழக்கு மாகாண மாகாண சபை,
திருகோணமலை,
2017, செத்தெம்பர் 4.

9 - 531

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாண மாகாண சபை

### வடமேல் மாகாண அரச சேவையின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்) /திட்டமிடல் கலைஞர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2017

வடமேல் மாகாண அரச சேவையில் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் கீழ்வரும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வடமேல் மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட தகுதி வாய்ந்த ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| குறியீட்டு இல. | பதவிப் பெயர் |
|---|---|
| 1 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின் ) III தரம் |
| 2 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின் ) ஒரு வருட பயிற்சித் தரம் |
| 3 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின் ) இரு வருட பயிற்சித் தரம் |
| 4 | வரைபடக் கலைஞர் ஒரு வருட பயிற்சித் தரம் |

இந்தப் பரீட்சை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவினால் 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் குருநாகல் நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையம் ஒன்றில் நடைபெறும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது. பரீட்சையைப் பிற் போடுவதற்கும், இரத்துச் செய்வதற்கும் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

1. **பொதுவான தகைமைகள் :**

1.1 விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு வடமேல் மாகாண சபை அதிகாரப் பிரதேசத்தினுள் ஆகக் குறைந்தது 3 வருடங்களுக்குக் குறையாத காலத்திற்கு நிலையான வதிவைக் கொண்டிருக்க வேண்டும்.
(விண்ணப்பதாரி வடமேல் மாகாணத்தில் 3 வருடங்களுக்குக் குறைவில்லாத காலம் நிலையான வதிவைக் கொண்ட ஒருவரைத் திருமணம் செய்திருப்பின் வாழ்க்கைத் துணையின் நிலையான வதிவு கவனத்தில் கொள்ளப்படும்.)

1.2 நற்பண்புடையவராக இருக்க வேண்டும்

1.3 விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

1.4 ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தமைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதப்படுவது விண்ணப்பதாரி சகல சகல தகைமைகள் மற்றும் வயது எல்லையை விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியான 2017, ஒற்றோபர் 20 ஆந் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

1.5 வடமேல் மாகாணத்தினுள் சகல பகுதிகளிலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் அலுவல்களைச் செய்வதற்கான உடல், உள தகுதியுடனும் இருத்தல் வேண்டும்.

♦ ஏதேனும் ஒரு மதப்பிரிவின் துறவி ஒருவர் இந்தப் பரீடசைக்குத் தோற்றுவதற்குத் தகுதி பெறமாட்டார்.

2. **சம்பள அளவுத் திட்டம் :**

2.1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில் /மின்) III தரம்
இந்தப் பதவிக்கு உரிய சம்பள அளவுத் திட்டம் MN3-2016 இன் படி ரூ. 31,040-10X445-11X730-10X750- ரூ.57,550 ஆகும்.
(2016.02.25 ஆந் திகதிய 3/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்று நிருபத்தின் 1 ஆம் உப பட்டியலின் படி)
எனினும் 2020.01.01 வரை உங்களுக்கு சம்பளங்கள் வழங்கப்படுவது அந்தச் சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளின் படி அதன் அட்டவணை II இல் சொல்லப்பட்டுள்ளதன் பிரகாரமாகும்.

2.2 தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்)
பயிற்சிக் காலத்தினுள் பின்வருமாறு கொடுப்பனவு வழங்கப்படும்.
(பொரு நிருவாகச் சுற்று நிருபம் 3/2016 இன் 23.1 ஆம் பிரிவின் அடிப்படையில்)
முதலாம் வருடம்- மாதாந்தக் கொடுப்பனவு - ரூ. 18,728 மற்றும் சீராக்கல் கொடுப்பனவு ரூ. 7,110
இரண்டாம் வருடம் மாதாந்தக் கொடுப்பனவு - ரூ. 18,935 மற்றும் சீராக்கல் கொடுப்பனவு ரூ. 7,070

3. **கல்வித் தகைமைகள் மற்றும் தொழில் தகைமைகள் மேற்கூறிய பதவிகளுக்காக :**

(அ) கல்வித் தகைமைகள்

க.பொ.த. (உ./த.) பரீட்சை

தூய கணிதம்/பிரயோக கணிதம், இணைந்த கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்கள் உட்பட கணித/விஞ்ஞான பிரிவில் மூன்று பாடங்களில் அல்லது தொழில்நுட்பவியல் பிரிவிற்கு உட்பட்ட மூன்று பாடங்களில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும்

க.பொ.த. (சா./த.) பரீட்சை

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தி உட்பட ஆறு (6) பாடங்களில் ஒரே தடவையில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**கவனிக்க** : மேற்படி தகைமைகளுடன் ஒவ்வொரு பதவிக்கும் பின்வரும் தொழிற் தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) தொழில் தகைமைகள்

| பதவிப் பெயர் | தொழில் தகைமை |
|---|---|
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின் ) III தரம் | (i) மொறட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்பவியல் டிப்ளோமா (சிவில்/மின்) ஐப் பெற்றிருத்தல்;<br>அல்லது<br>(ii) தேசிய பயிலுனர் தொழிற்பயிற்சி அதிகார சபையினால் வழங்கப் படும் பொறியியல் தேசிய டிப்ளோமா (சிவில்/மின்) ஐப் பெற்றிருத்தல்;<br>அல்லது<br>(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்/மின்) ஐப் பெற்றிருத்தல்;<br>அல்லது<br>(iv) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் வழங்குகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்/மின்) வைப் பெற்றிருத்தல் ;<br>அல்லது<br>(v) இலங்கைப் பொறியியல் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற பொறியியல் பரீட்சையில் 1 ஆவது பகுதியில் சித்தியடைந்திருத்தல்;<br>அல்லது<br>(vi) தொழில் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில் தகைமை (NVQ) 6 மட்டத்தைப் பூரணப்படுத்தி வைத்திருத்தல்;<br>அல்லது<br>மேற்கூறிய தொழில்நுட்பத் தகைமைகளுக்கு சகல விதத்திலும் சமனானதாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமையைப் பெற்றிருத்தல். |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின் ) ஒரு வருட பயிற்சித் தரம் | (i) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் தொழிலுடன் தொடர்புடைய துறையில் பாடநெறி ஒன்றை வெற்றிகரமாகக் கற்று, தேறிய தொழில்நுட்பச் சான்றிதழ் (சிவில்/மின்) ஐப் பெற்றிருத்தல் ;<br>அல்லது<br>(ii) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் |

தொழிலுடன் தொடர்புடைய துறையில் சான்றிதழ் பாடநெறி ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்து உரிய சான்றிதழ் பெற்றிருத்தல் ;

அல்லது

(iii) மேற்கூறிய தொழில்நுட்பத் தமைமைகளுக்கு சகல விதத்திலும் சமனானதாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமையைப் பெற்றிருத்தல்.

| | |
|---|---|
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின் ) இரு வருட பயிற்சித் தரம் | தொழில் தகைமைகள் அவசியமற்றது. |
| வரைபடக் கலைஞர் ஒரு வருட பயிற்சித் தரம் | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் வரைப்படம் தொழில் தொடர்பில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பூரண கால பாடநெறி ஒன்றை வெற்றிகரமாகப் பயின்று உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல். |

***கவனிக்க :*** மேற்கூறிய சகல கல்வி மற்றும் தொழில் தகைமைகளும் 2017.10.20 ஆந் திகதிக்குப் பூரணப்படுத்தப்பட்டு சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

**4. சேவை நிபந்தனைகள்:**

4.1 தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கான தமைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் தொழில்நுட்ப சேவையின் IIஆம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

4.2 பயிற்சித் தரத்திற்கு உரிய தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் பயிற்சித் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

4.3 தொழில்நுட்பச் சேவையின் III ஆம் தரம் நிரந்தரமானதாகும். சேவைக்குரிய ஓய்வூதியம் தொடர்பில் அரசின் மூலம் எதிர்காலத்தில் தீர்மானிக்கின்ற கொள்கை ரீதியான தீர்மானங்களுக்குக் கட்டுப்பட வேண்டும்.

4.4 பயிற்சித் தரங்களுக்கு நியமிக்கப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சிக் காலம் முடிவில் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் IIIஆம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

4.5 இப்பதவிக்கு நியமிக்கப்படுவது மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும் என்பதுடன், அவர் நன்னடத்தைக் காலத்தினுள் தமது பணிகள் மற்றும் நடத்தை திருப்திகமாக இருந்து முதலாம் வினைத்திறன் தடைப் பரீட்சையில் சித்தியடைந்து மற்றும் ஏனைய பணியை நிரந்தரமாக்குவதற்கான தேவைப்படுகளைப் பூர்த்தி செய்திருப்பின் தகுதிகான் காலத்தின் முடிவில் பணி நிரந்தரமாக்கப்படும்.

4.6 அரச கரும மொழி அல்லாத மொழி மூலம் ஒன்றினால் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்கள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியை குறிப்பிட்ட தகுதிகாண் காலத்தினுள் பெற்றுக் கொள்ள வேண்டும். பொது நிர்வாக சுற்று நிருபம் 01/2014 இன் படியும் அதன் தொடர்ச்சியான சுற்று நிருபங்களின் படியும் உரிய மட்ட மொழித் தேர்ச்சியை உரிய கால எல்லையினுள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4.7 ஆங்கில மொழி தொடர்பில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் திறமைச் சித்தி ஒன்றை III ஆம் தரத்தில் 5 வருட சேவையைப் பூர்த்தி செய்வதற்கிடையில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4.8 தாபனக் கோவையின் Iஆவது பிரிவின் IIஆவது பிரிவின் 10 தொடக்கம் 12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பதவிக்கு பொருத்தமானவாறு தொடர்புடையதாகும். மேலும் இந்தப் பதவிக்கு நியமனம் செய்தல்/பதவி உயர்வு வழங்குதல் செயற்கோவையின் விதிமுறைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதி சார் விதிமுறைகளுக்கும் வடமேல் மாகாண நிதி ஒழுங்குக் கோவையின், வடமேல் மாகாண ஒழுக்காற்றுக் கோவை, வடமேல் மாகாண சபை ஒழுங்கு விதிமுறைகள், திணைக்களக் கட்டளைகள் மற்றும் வடமேல் மாகாண தொழில்நுட்ப சேவை பிரமாணத்திற்கும் அரசு மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய ஏற்பாடுகளுக்கும் அமைய செயற்படுவதற்கு சகல உத்தியோகத்தர்களும் உறுதிப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும்.

**5. ஆட்சேர்ப்புச் செய்யும் முறை:**

5.1 விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரரின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட குறைவாக இருப்பின் தமைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சை ஒன்று மாத்திரம் நடாத்தப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை, வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதிகமாக இருந்தால் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு மூலம் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில்

ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இப்பரீட்சை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவினால் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் குருநாகலில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

5.2 III ஆம் தரத்திற்கு நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகுதியானவர்கள் போதுமான எண்ணிக்கையில் இருக்கும் பட்சத்தில் III ஆம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

5.3 III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான தகைமையைக் கொண்டவர்கள் போதுமானதாக இல்லாத போது அந்த வெற்றிடங்களுக்கு ஒரு வருட பயிற்சித் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள். அவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகள் சேவைக்குரிய பாடத் திட்டத்திற்கு ஏற்ப ஒரு வருட தத்துவ மற்றும் செயன்முறைப் பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து உரிய பரீட்சையிலும் சித்தியடைந்த பின்னர் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவார்கள்.

5.4 ஒரு பருட பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமையைக் கொண்டவர்கள் போதுமானதாக இல்லாத போது அந்த வெற்றிடங்களுக்கு இரு வருட பயிற்சித் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள். அவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகள் சேவைக்குரிய பாடத் திட்டத்திற்கு ஏற்ப, இரு வருட தத்ததுவ மற்றும் செயன்முறைப் பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து உரிய பரீட்சையிலும் சித்தியடைந்த பின்னர் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவார்கள்.

***குறிப்பு*** : மேற்படி பயிற்சிக் காலத்தின் முடிவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுநர்களுக்கு மேலும் 6 மாதங்களுக்குத் தங்களுடைய பயிற்சியை நீடித்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளது. அவ்வாறு நீடிக்கப்படும் கால எல்லை முடிவில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுநர்களின் சேவை முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

5.5. வெற்றிடங்களில் 70% திறந்த அடிப்படையில் நிரப்பப்படும்.

5.6 பாடத் திட்டத்தில் காட்டப்படும் ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரிகள் புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்படுவார்கள். அந்த பட்டியலின் வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசித்துள்ள எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு, தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது.

6.0. ***எழுத்து பரீட்சை*** :

எழுத்துப் பரீட்சை இரண்டு வினாப் பத்திரங்களை உள்ளடக்கியது.

| பதவி | வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளி | சித்தி பெறுவதற்கு வேண்டிய புள்ளி |
|---|---|---|---|---|
| 1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்) III தரம்<br>2. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்) ஒரு வருட பயிற்சித் தரம்<br>3. வரைப்படக் கலைஞர் ஒரு வருட பயிற்சித் தரம் | பொது உளச் சார்பு | 1 மணித்தியாலம் | 100 | 40% |
| | விடயம் தொடர்பான தொழில்நுட்பப் பரீட்சை | 3 மணித்தியாலம் | 100 | 40% |
| 1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்) இரு வருட பயிற்சித் தரம் | பொது உளச் சார்பு | 1 மணித்தியாலம் | 100 | 40% |

**6.1 பாடத் திட்டம்**

***01. பொது உளச் சார்பு*** ( காலம் 1 மணித்தியாலம் -100 புள்ளிகள் )

விண்ணப்பதாரிகளின் மொழித்திறன், கணிதத் திறன் மற்றும் தர்க்கத் திறன் என்பவற்றை மதிப்பீடு செய்து கொள்ளும் நோக்கில் தயாரிக்கப்படும் குறு விடை மற்றும் கட்டுரை அமைப்பு வினாக்களை உள்ளடக்கியதாகும்.

***02. விடயம் தொடர்பான தொழில்நுட்ப பரீட்சை*** ( காலம் 03 மணித்தியாலம் -100 புள்ளிகள் )

(அ) தொழில்நுட்ப உத்தியோகத்தர் III ஆம் தரம் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒரு வருட பயிற்சித் காலம்.

கட்டட நிர்மாணக் கோட்பாடுகள், நிர்மாண செயற்பாடுகளுக்காக ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் வாசித்து விளங்கும் ஆற்றல், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, கழிவு அகற்றல் தொடர்பில் விண்ணப்பதாரியிடம் உள்ள திறமைகளை மதிப்பீடு செய்வதற்கான வினாக்களை உள்ளடக்கியது.

(ஆ) வரைபடக் கலைஞர் ஒரு வருட பயிற்சித் தரம்

கட்டட நிர்மாணம் தொடர்பான அறிவு அளவுத் திட்டத்திற்கு ஏற்ப வரைதல், திட்டம் ஒன்றை அல்லது திட்டப் படம் ஒன்றை விளங்கிக் கொள்ளல், கட்டமைக்கப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பிலான அடிப்படை அறிவு, கணிப்புக்கள் தொடர்பான அறிவு, கேந்திர மற்றும் இயந்திர வரைதல்கள் தொடர்பான அடிப்படை அறிவு என்பவற்றைப் பரீட்சிக்கும் வினாக்களை உள்ளடக்கியது. இந்த வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பதற்குத் தேவையான கேத்திர கணித உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் விண்ணப்பதாரியினால் பரீட்சை மண்டபத்திற்கு எடுத்துவரப்பட வேண்டும்.

**7. பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணமாக 500 ரூபாவை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வரவு வைக்கப்படுமாறு விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் அலுகலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் வமே.மா.ச. நி 2 பற்றுச் சீட்டினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்வாறு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினைத் தவிர, வேறு நிறுவனங்களில் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது. (பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றை எதிர்காலப் பயன்பாட்டிற்காக தம் வசம் வைத்திருக்கவும்) எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும் இந்தப் பரீட்சைக் கட்டணம் வேறு எந்தப் பரீட்சைக்கும் பயன்படுத்துவதற்கு மாற்றப்பட முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

**8. விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

8.1. விண்ணப்பப்படிவம் A4 தாளில் ( 21 x 29 செ.மீ. ) அளவுத் தாளினைப் பயன்படுத்தி.-

(i) இலக்கம் 1 தொடக்கம் 3 வரை முதல் பக்கத்திலும்,

(ii) 04 தொடக்கம் தொடர்ந்து வருபவை ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்குமாறு

விண்ணப்பப் படிவத்தைத் தயார் செய்ய வேண்டும்.

8.2 மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவில்லாத, குறித்த தினத்திற்கு முன்னர் பணம் செலுத்தத் தவறிய, உரிய தகவல்கள் உள்ளடக்கப்படாத, பூரணமற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள், முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததா என்பதை உறுதி செய்து கொள்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். முறையாக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யாமையால் ஏற்படும் நட்டங்களுக்கு விண்ணப்பதாரியே பொறுப்பாளர் ஆவார். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம். விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது.

8.3 **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரச பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர் /சமாதான நீதவான் ஒருவர் /சத்தியப் பிரமாண ஆணையாளர் /சட்டத்தரணி ஒருவர் /முப்படையின் அதிகாரி ஒருவர் /பொலிஸ் சேவையின் அதிகாரி ஒருவர் அல்லது 240,360 ரூபாவுக்கு அதிகமான தொகையை வருடாந்த அடிப்படைச் சம்பளமாகப் பெறும், நிரந்தரமான அரச/ மாகாண அரச பதவி ஒன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

9. விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கி அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி/பதவிகள் மற்றும் அதற்குரிய குறியீட்டு இலக்கம் என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். அவ்வாறு முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 2017.10.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "செயலாளர், வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தமைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கப் பெறவில்லையாயின் பின்வரும் தகவல்களுடன் வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழுவுக்கு அறிவிக்க வேண்டும்:-

(i) பரீட்சையின் பெயர்;
(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர்;
(iii) முகவரி;
(iv) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்;
(v) விண்ணப்பப் படிவத்தை தபாலிலிட்ட அலுவலகம், பதிவு இலக்கம் மற்றும் அனுப்பிய திகதி.

10. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்** :
பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் சகல பாடங்களிற்காகவும் ஆளடையாளத்தை உறுதி செய்ய பின்வரும் ஆவணங்களில் ஒன்றின் மூலம் உறுதி செய்ய வேண்டும்:-
1. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;
2. செல்லுபடியான கடவுச் சீட்டு.

**குறிப்பு** :- பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த விண்ணப்பதாரி தவறினால் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

11. விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்ட திட்டங்களின் அடிப்படையில் ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் என அறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பத் தகைமை செல்லுபடியற்றதாக்க முடியும். விண்ணப்பதாரியினால் முன்வைக்கப்படும் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போலியானது என தெரியவரின் அவர் வடமேல் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைத்தலானது அவர் குறித்த பதவிக்கு தேவையான தகைமைகளைப் பூர்த்திச் செய்துள்ளமையை ஏற்றுக் கொண்டமையாகக் கருதப்பட மாட்டாது.

12. விண்ணப்பம் கோரும்அறிவித்தலுடன் தொடர்புள்ள விடயங்கள் மற்றும் இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏனைய விடயங்கள் தொடர்பில் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.

13. இந்தப் பரீட்சையை நடாத்துதல், நடாத்தாது விடுதல் அல்லது நடாத்திய பின்னர் தெரிவு செய்தல்/தெரிவு செய்யாமல்விடல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை போன்றவை தொடர்பான இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரியதாகும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும்.

14. சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களில் சொற்றொடர்களிடையே இணக்கமின்மைகள் காணப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்படும்.

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பத்மினி காரியவசம்,
செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு.

மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு (வடமேல்)
மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2017, செத்தெம்பர் 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்காக

**வடமேல் மாகாண அரச சேவையில் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்) திட்டமிடல் கலைஞர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2017**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (உரிய கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக)

சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

| விண்ணப்பிக்கும் பதவி/பதவிகளின் பெயர் | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

1. 1.1. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில் /தமிழில்) திரு./திருமதி/செல்வி :-
…………………………………………………………………………………………………………
   1.2. முதலெழுத்துக்களுடன் பெயர் ( ஆங்கில பெரிய எழுத்துக்களில்) Mr./ Ms./ Mrs. :-
…………………………………………………………………………………………………………
   1.3. முழுப் பெயர் ( சிங்களத்தில் /தமிழில் ) திரு./திருமதி/செல்வி :-
…………………………………………………………………………………………………………
   1.4. முழுப் பெயர் ( ஆங்கில பெரிய எழுத்துக்களில் )Mr./ Ms./ Mrs. :-
…………………………………………………………………………………………………………
   1.5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :- ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

2. 2.1. நிரந்தர முகவரி (சிங்களத்தில் /தமிழில் ) :-
…………………………………………………………………………………………………………
   2.2. நிரந்த முகவரி ( ஆங்கில பெரிய எழுத்துக்களில் ) :-
…………………………………………………………………………………………………………
   2.3. அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி :-
…………………………………………………………………………………………………………
   2.4. தொலைபேசி இலக்கம் :- ……………………………………………………

3. 3.1. பால் :- பெண் - F ☐ ஆண் - M ☐
   3.2. பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐
   3.3. 2017.10.20 ஆம் திகதிக்கு வயது :- வருடங்கள் ☐☐☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. 4.1. விண்ணப்பதாரி வதியும் நிர்வாக மாவட்டம்:- …………………………………………………
   4.2. பிரதேச செயலாளர் பிரிவு :- …………………………………………………………
   4.3. கிராம அலுவலர் பிரிவு :- …………………………………………………………

5. **கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :**

5.1 க.பொ.த (சா./த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :
பரீட்சையின் ஆண்டு மற்றும் மாதம் :- ....................................................................
பரீட்சை சுட்டெண் :- ....................................................................

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

5.2 க.பொ.த ( உ. /த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :
பரீட்சையின் ஆண்டு மற்றும் மாதம் :- ....................................................................
பரீட்சை சுட்டெண்:- ....................................................................

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

5.3. தொழில் தகைமைகள் :

| நிறுவனம் | கற்ற பாடநெறி | கால எல்லை | பெறுபேறு | சான்றிதழ் இலக்கம் மற்றும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

6. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரங்கள் :

6.1 பற்றுச் சீட்டு இலக்கம் : ................................. தொகை : .........................
திகதி : .....................................................
வழங்கிய பிரதேச செயலகம் :- ..........................................................................

| பற்றுச் சீட்டை இங்கே ஒட்டவும் |
|---|

7. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மை என உறுதிப்படுத்துகிறேன். இங்கு ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாமை மற்றும் பிழையாக பூரணப்படுத்துவதால் ஏற்படக் கூடிய நட்டங்களை ஏற்றுக் கொள்வதற்கும் உடன்படுகிறேன். மேலும் இவ்விண்ணப்பப்படிவத்தின் சகல பகுதிகளும் பூரணப் படுத்தப்பட்டுள்ளது என்பதையும் உறுதி கூறுகிறேன். பரீட்சையின் சகல நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்படும் தகவல்கள் பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு முன்னராயின் தகுதியற்றவாராவேன் என்பதையும், பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னராயின் பதவியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி :- ................................................ ......................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

8. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்
இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி ............................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் ......................................... ஆம் திகதி என் முன்னிலையின் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதி செய்கிறேன்.

.....................................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் : .....................................................
பதவி, உத்தியோகபூர்வ முத்திரை : ..................................................
திகதி : ............................................................................

(இந்த உறுதிப்படுத்தல் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமான ஆணையாளர், சட்டத்தரணி, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது 2,40,360 ரூபாவுக்கு மேற்பட்ட வருடாந்த வருமானத்தைப் பெறும் நிரந்தரமான அரச/மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்).

9-612

---

**வடமேல் மாகாண மாகாண சபை**

வடமேல் மாகாண அரச சேவையின் நூலகர் III தரத்திற்கான பதவிகளுக்கான ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017

வடமேல் மாகாண அரச சேவையில் பிரதேச சபைகளின் நூலகர் III ஆம் தரத்திற்கு வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதி வாய்ந்த வடமேல் மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட, தகுதி வாய்ந்த ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பரீட்சை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவினால் 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் குருநாகல் நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையம் ஒன்றில் நடைபெறும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகிறது. பரீட்சையைப் பிற்போடுவதற்கும் இரத்துச் செய்வதற்கும் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

1. **சம்பள அளவுத்திட்டம் :**
இந்தப் பதவிக்கு உரிய சம்பள அளவுத் திட்டம் MN3 - 2016 இன் படி,
ரூ. 31, 040 - 10x445-11x660-10x730-10x750- ரூ. 57,550 ஆகும்.
(2016.02.25 ஆந் திகதியுடைய 03/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்று நிருபத்தின் I ஆம் பட்டியலின் படி) எனினும் 2020.01.01 வரை உங்களுக்கு சம்பளங்கள் வழங்கப்படுவது அந்தச் சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளின் படி அதன் பட்டியல் II இல் சொல்லப்பட்டுள்ளதன் பிரகாரமாகும்.

2. **கல்வித் தகைமைகள் :**
(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களுக்கு திறமைச் சித்தி பெற்று ஆங்கிலம் உட்பட ஆறு (06) பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். (இவற்றில் ஒரே அமர்வில் 5 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்)

மற்றும்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (பொதுச் சாதாரண பரீட்சை தவிர்ந்த)

(ஆ) (i) ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் கலைமாணி (பொது நூலகர் பட்டப் பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்;

அல்லது

(ii) இலங்கை நூலகச் சங்கத்தில் நூலக விஞ்ஞானம் தொடர்பில் மூன்று வருட பாடநெறியில் சித்தியடைந்திருத்தல்;

அல்லது

(iii) ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் நூலக விஞ்ஞானம் தொடர்பில் 3 வருட டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தல்.

**3. ஏனைய தகைமைகள் :**

(i) நற்பண்புடையவராக இருக்க வேண்டும்.

(ii) விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் ஆகக் குறைந்தது 3 வருடங்களுக்கு குறையாத காலத்திற்கு நிலையான வதிவைக் கொண்டிருக்க வேண்டும். (வதியும் கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட, பிரதேச செயலாளரினால் கையொப்பம் இடப்பட்ட வதிவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

(iii) 2017.10.20 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற் படாதவராகவும் இருக்க வேண்டும். (தற்போது அரச சேவையில் உள்ள ஒருவருக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

(iv) ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான சகல தகைமைகளும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியான 2017.10.20 ஆந் திகதிக்குப் பூர்த்தி செய்து சான்றிதழ்களைப் பெற்றிருக்க வேண்டும்.

(v) வடமேல் மாகாணத்தினுள் சகல பகுதிகளிலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் அலுவல்களைச் செய்வதற்கான உடல், உள தகுதியுடனும் இருத்தல் வேண்டும்.

**4. சேவை நிபந்தனைகள் :**

4.1 இப்பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியம் தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

4.2 இப்பதவிக்கு நியமிக்கப்படுவது மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவாகும் என்பதுடன், அவர் தகுதிகாண் காலத்தினுள் தமது பணிகள் மற்றும் நடத்தை திருப்திகரமாக இருந்து முதலாம் வினைத் திறன் தடைப் பரீட்சையில் சித்தியடைந்து மற்றும் ஏனைய பணியை நிரந்தரமாக்குவதற்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருப்பின் நன்னடத்தைக் காலத்தின் முடிவில் பணி நிரந்தரமாக்கப்படும்.

4.3 அரச மொழி அல்லாத மொழி மூலம் ஒன்றினால் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்கள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியை குறிப்பிட்ட தகுதிகாண் காலத்தினுள் பெற்றுக் கொள்ள வேண்டும். பொது நிருவாக சுற்று நிருபம் 01/2014 இன் படியும் அதன் தொடர்ச்சியான சுற்று நிருபங்களின் படியும் உரிய மட்ட மொழித் தேர்ச்சியை உரிய கால எல்லையினுள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4.4 இந்தப் பதவிக்கு நியமனம் செய்தல்/பதிவி உயர்வு வழங்குதல் செயற்கோவையின் விதிமுறைகளுக்கு மேலதிகமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதி சார் விதிமுறைகளுக்கும் வடமேல் மாகாண நிதி ஒழுங்குக் கோவையின், வடமேல் மாகாண ஒழுக்காற்றுக் கோவை, வடமேல் மாகாண சபை ஒழுங்கு விதிமுறைகள், திணைக்கள கட்டளைகள் மற்றும் வடமேல் மாகாண தொழில்நுட்ப சேவை பிரமானக் குறிப்புக்கும் அரச மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய ஏற்பாடுகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

**5. ஆட்சேர்ப்பு செய்யும் முறைமை :**

5.1 வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழு மூலம் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். பரீட்சை பாடத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% க்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகளின் 03 பாடத்திற்குமான புள்ளிகளைக் கூட்டி, அவற்றின் வரிசைப்படி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையினர் தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது. நேர்முகப் பரீட்சையின் கல்வி, தொழில் மற்றும் அடிப்படைத் தகைமைகள் பரிசீலிக்கப்படல் மற்றும் உடல் தகுதியும் பரிசீலிக்கப்படல் நடைபெறும்.

5.2 வெற்றிடங்களில் 60% திறந்த போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் நிரப்பப்படும்.

5.3 வெற்றிடங்களில் 40% மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் பூரணப்படுத்தப்பட முடியாத சந்தர்ப்பத்தில் எஞ்சிய வெற்றிடங்களும் திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களைக் கொண்டு பூரணப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**6. எழுத்துப் பரீட்சை :**

6.1 எழுத்துப் பரீட்சை சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

6.2 இப்பரீட்சை 03 வினாப்பத்திரங்களை உள்ளடக்கியது.

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளி | சித்திப் பெற வேண்டிய புள்ளி |
|---|---|---|---|
| நூலக விஞ்ஞானம் | 3 மணித்தியாலம் | 100 | 40% |
| பொது உளச் சார்பு | 1 மணித்தியாலம் | 100 | 40% |
| பொது அறிவு | 1 மணித்தியாலம் | 100 | 40% |

விரிவான பரீட்சைப் பாடத்திட்டம் 1 ஆம் இணைக்கப்பட்டுள்ளது.

**7. பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணமாக 500 ரூபாவை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் வருமானத் தலைப்பு 2003-02-13 வரவு வைக்கப்படுமாறு செலுத்தப்பட வேண்டும். வடமேல் மாகாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகள் தமது நிலையான வதிவைக் கொண்ட பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அந்த நிதியைச் செலுத்த வேண்டும். அவ்வாறு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட வமே. மா. ச. நி. 2 பற்றுச் சீட்டினை தவிர, வேறு நிறுவனங்களில் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது. (பற்றுச் சீட்டின் நிழற் படப்பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் எதிர் காலத்தில் பயன்படலாம்). எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும் இந்த பரீட்சைக் கட்டணம் வேறு எந்தப் பரீட்சைக்கும் பயன்படுத்துவதற்கு மாற்றப்பட முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

**8. விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

8.1 இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக A4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 2017.10.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல் " என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவத்தை உள்ளடக்கி அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடமேல் மாகாண அரச சேவையின் நூலகர் தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சை - 2017" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

8.2 மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவில்லாத, குறித்த தினத்திற்கு முன்னர் பணம் செலுத்தத் தவறிய, தாமதமாகக் கிடைக்கின்ற, தெளிவற்ற, பூரணமற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப் படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை ஒத்ததா என்பதை உறுதி செய்து கொள்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். முறையாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்யாமையால் ஏற்படும் நட்டங்களுக்கு விண்ணப்பதாரியே பொறுப்பாளர் ஆவார். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற் படப்பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம். விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது.

8.3 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.
விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது 2,40,360 ரூபாவுக்கு மேற்பட்ட வருடாந்த வருமானத்தைப் பெறும் நிரந்தரமான அரச/மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**9.** இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிச் அட்டை அனுப்பப்படுதல் என்பது விண்ணப்பதாரி இந்தப் பதவிக்கான தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக் கொண்டமை ஆகாது. தகைமையை உறுதி செய்வதற்கான

உரிய ஆவணங்களின் மூலப் பிரதியை நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்க வேண்டும். சகல விண்ணப்பதாரிகளினதும் பதவிக்கான சகல தகைமைகளும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்டதாக இருத்தல் கட்டாயமானது.

**10. பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதி செய்தல் :**

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் சகல பாடங்களிற்காகவும் ஆளடையாளத்தை உறுதி செய்ய பின்வரும் ஆவணங்களில் ஒன்றின் மூலம் உறுதி செய்ய வேண்டும்.

1. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;
2. செல்லுபடியான கடவுச் சீட்டு.

**குறிப்பு.** – பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த விண்ணப்பதாரி தவறினால் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவராகக் கருததப்படுவார்.

**11.** விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். அந்தத் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றப்பட இடமளிக்க மாட்டாது. இந்தப் பரீட்சையின் சட்ட திட்டங்களின் அடிப்படையில் ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் என அறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சாத்த தகைமையை செல்லுபடியற்றதாக்க முடிவும். விண்ணப்பதாரியினால் முன் வைக்கப்படும் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போலியானது என கருதப்படின் அவர் வடமேல் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுதலானது அவர் குறித்த பதவிக்கு தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமையை ஏற்றுக் கொண்டமையாகக் கருதப்பட மாட்டாது.

**12.** ஏதேனும் ஒரு விண்ணப்பதாரிக்கு பரீட்சைத் தினத்திற்கு ஏழு (07) நாட்களுக்கு முன்னர் அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கப் பெறவில்லையாயின் பின்வரும் தகவல்களுடன் "செயலாளர், வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழு, வடமேல் மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும். அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்:-

(i) பரீட்சையின் பெயர்;
(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர்;
(iii) முகவரி;
(iv) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்;
(v) விண்ணப்பப் படிவத்தை தபாலிட்ட அலுவலம், பதிவு இலக்கம் மற்றும் அனுப்பிய திகதி.

**13.** விண்ணப்பம் கோரும் அறிவித்தலுடன் தொடர்புள்ள விடயங்கள் மற்றும் இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏனைய விடயங்கள் தொடர்பில் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.

**14.** இந்தப் பரீட்சையை நடாத்துதல், நடாத்தாது விடுதல் அல்லது நடாத்திய பின்னர் தெரிவு செய்தல்/தெரிவு செய்யாமல் விடல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை போன்றவை தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரியதாகும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும்.

**15.** சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களில் சொற்றொடர்களிடையே இணக்கமின்மைகள் காணப்படுவதாக இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்படும்.

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பத்மினி காரியவசம்,
செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு.

மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு (வடமேல்)
மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2017, செத்தெம்பர் 7.

மாதிரி விண்ணப்பப் படிவம்

அலுவலக உபயோகத்திற்காக [ ]

**வடமேல் மாகாண சபை அரச சேவையின் நூலகர் III ஆம் தரத்திற்கான பதவிகளுக்கான ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2017**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (உரிய கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக)

சிங்களம் [ ] தமிழ் [ ] ஆங்கிலம் [ ]

1. 1.1. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) திரு./திருமதி/செல்வி :-
……………………………………………………………………………………

1.2. முதலெழுத்துக்களுடன் பெயர் ( ஆங்கில பெரிய எழுத்துக்களில்) Mr./ Ms./ Mrs. :-
……………………………………………………………………………………

1.3. முழுப் பெயர் ( சிங்களத்தில்/தமிழில் ) திரு./திருமதி/செல்வி :-
……………………………………………………………………………………

1.4. முழுப் பெயர் ( ஆங்கில பெரிய எழுத்துக்களில் )Mr./ Ms./ Mrs. :-
……………………………………………………………………………………

1.5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

2. 2.1. நிரந்தர முகவரி (சிங்களத்தில் /தமிழில் ) :-
……………………………………………………………………………………

2.2. நிரந்த முகவரி ( ஆங்கில பெரிய எழுத்துக்களில் ) :-
……………………………………………………………………………………

2.3. அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி :-
……………………………………………………………………………………

2.4. தொலைபேசி இலக்கம் :- ……………………………………………………

3. 3.1. பால் :- ஆண் - M [ ] பெண் - F [ ]

3.2. பிறந்த திகதி :- ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

3.3. 2017.10.20 ஆம் திகதிக்கு வயது : வருடங்கள்: [ | | | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

4. 4.1. விண்ணப்பதாரி வதியும் நிர்வாக மாவட்டம்:- ……………………………………………

4.2. பிரதேச செயலாளர் பிரிவு :- ……………………………………………………

4.3. கிராம அலுவலர் பிரிவு :- ……………………………………………………

4.4. 2017.10.20 ஆம் திகதிக்கு வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவுக் காலம் :-

வருடங்கள் : [ | | | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

5. கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :

5.1 க.பொ.த (சா./த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :

முதலாம் அமர்வு : ஆண்டு, மாதம் :- ........................................ சுட்டெண் : ..........................

இரண்டாம் அமர்வு : ஆண்டு, மாதம் :- ..................................... சுட்டெண் : ..........................

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

5.2 க.பொ.த ( உ. /த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :

பரீட்சையின் ஆண்டு மற்றும் மாதம் :- ..................................................................

பரீட்சை சுட்டெண் :- ..................................................................

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

5.3. பெற்றுக் கொண்டுள்ள பட்டம் தொடர்பான விபரம் :-

5.3.1 பட்டம்/டிப்ளோமா :- ..........................................................................................................

5.3.2 பட்டம் பெற்றுக் கொண்ட பல்கலைக் கழகம் :- ..........................................................................

5.3.3 கல்விபெற்ற காலப் பகுதி :- ..........................................................................

5.3.4 பட்டம்/டிப்ளோமா செல்லுபடியாகும் காலம் :- ..........................................................................

6. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரங்கள் :

6.1 பற்றுச் சீட்டு இலக்கம் :- ................................. தொகை :- .........................

திகதி :- ..................................................

வழங்கிய பிரதேச செயலகம் :- ..........................................................................

| பற்றுச் சீட்டை இங்கே ஒட்டவும் |
|---|

7. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மை என உறுதிப்படுத்துகிறேன். இங்கு ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாமை மற்றும் மேலும் பரீட்சை விதிமுறைகளுக்கு ஏற்ப செயற்படுவதற்கும், இந்தப் பரீட்சையின் விதிமுறைகளின் பிழையாக பூரணப்படுத்துவதால் ஏற்படக் கூடிய நட்டங்களை ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகிறேன். மேலும் இவ்விண்ணப்பப்படிவத்தின் சகல பகுதிகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் உறுதி கூறுகிறேன். பரீட்சையின் சகல நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்படும் தகவல்கள் பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் தகுதியற்றவாராவேன் என்பதையும், பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னால் பதவியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி :- ................................................ ..................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

8. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி ............................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் .......................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதி செய்கிறேன்.

......................................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் : ......................................................

பதவி, உத்தியோகபூர்வ முத்திரை : ..................................................

திகதி : .........................................................................

(இந்த உறுதிப்படுத்தல் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமான ஆணையாளர், சட்டத்தரனி, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியின் படி பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது 240,360 ரூபாவுக்கு மேற்பட்ட வருடாந்த வருமானத்தைப் பெறும் நிரந்தரமான அரச/மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்).

9. தற்போது அரச/மாகாண அரச உத்தியோகத்தராக உள்ள விண்ணப்பதாரிகளுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

திரு./திருமதி/செல்வி ........................................................... என்பவர் அமைச்சில்/திணைக்களத்தில் ஆக பணியாற்றுவதுடன், அவரின் பணி திருப்திகரமானது எனபதுடன் அவர் குறித்த பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை பணியிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்பதையும், மேலே குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

......................................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

அதிகாரமளித்த உத்தியோகத்தர் :- .....................................................................

அமைச்சு/ திணைக்களம் :- ...................................................................................

திகதி :- ..........................................................................................................

(உத்தியோகபூர்வ முத்திரையை பதிந்து உறுதிப்படுத்தவும்)

## அட்டவணை 1

## விரிவான பாடத் திட்டம்

**1. நூலக விஞ்ஞானம் :**

1. நூலகமும், நூலகர்த்துவமும்
   - (i) நூலகம், மற்றும் நூலக வரலாறு, புராதன மற்றும் நூதன யுகங்களின் பிரதான நூலகங்கள்
   - (ii) எழுத்துக் கலை மற்றும் புத்தகங்கள் உட்பட எழுத்து ஊடகங்களின் ஆரம்பமும், விரிவாக்கமும்.
   - (iii) அச்சுக் கலை நுட்பத்தின் ஆரம்பம், பரம்பல், நூலக மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பில் ஏற்படுத்தியுள்ள தாக்கம்.
   - (iv) நூலக வகைகள்
     - (i) விசேட நூலகங்கள்
     - (ii) கல்வி நூலகம்
     - (iii) பாடசாலை நூலகம்
     - (iv) பொது நூலகம்
     - (v) பிரிவெனா நூலகங்கள் மற்றும் மத நிறுவன நூலகங்கள்
   - (v) நூலகக் குழு - கட்டமைப்பு, தேவைப்பாடு, முக்கியத்துவம் மற்றும் பணிகள்
   - (vi) தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக நூலகத் தொழில் துறையுடன் தொடர்புடைய புலமைத் தொழில் வாண்மை நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பணிகள் (இலங்கை, இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா)
   - (vii) நூலகக் கட்டடங்கள் - திட்டமிடலில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள், மற்றும் தற்போதுள்ள கட்டடம் ஒன்றில் நூலகம் ஒன்றை ஸ்தாபித்தல், ஏற்பாடு செய்தல் அல்லது அபிவிருத்தி செய்தல்.
   - (viii) நூலகப் பொருட்களின் பராமரிப்பு, காப்பு (Conservation) மற்றும் பாதுகாப்பு (Preservation)

2. அறிவு மற்றும் தகவல் ஒழுங்கமைப்பு
   - (i) நூல்கள் வகைப்படுத்தல், நோக்கங்கள் மற்றும் பயன்கள்
   - (ii) நூல் வகைப்படுத்தல் முறைகள்

(iii) நூலக சுட்டின் நோக்கம் : ஆங்லோ அமெரிக்க சுட்டிடல் சட்டக் கோவை (AACR)
(iv) நூல் விபரம்
(v) AACR 2 நெறிமுறையைப் பயன்படுத்தி பதிவேடுகளைப் பேணல்.

3. நூலக வளங்கள் மற்றும் தகவல் சேவைகள்
(i) பல்வேறு நூலக வளங்கள்
(ii) தொகுப்பு அபிவிருத்தி, தொகுப்பு அபிவிருத்தி செயற்பாடு மற்றும் ஜோடிக்கப்படல்.
(iii) இருப்புக் கணிப்பீடு மற்றும் அழித்தல் செயல் ஒழுங்கு
(iv) வெளியீடு, வெளியீட்டு உரிமை மற்றும் தடைகள்
(v) விழிப்புணர்வு சேவைகள் (Current Awareness Service)
(vi) வாசகர் கல்வி வேலைத் திட்டம்.
(vii) மக்கள் தொடர்பு மற்றும் நூலக பிரசாரம்

4. தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் (Information Communication Technology) நூலக சேவைகள் தொடர்பில் கணினித் தொழில் நுட்பத்தின் தாக்கம் மற்றும் E- Library System

2. **பொது உளச் சார்பு**

சொற்கள், எண்கள் மற்றும் உருக்கள் என்ற அடிப்படையில் முன்வைக்கப்படும் வினாக்கள் தொடர்பில் முன்வைக்கும் கருத்துக்கள் மற்றும் துலங்கள்களின் அடிப்படையில் அந்த பிரச்சினைகள் குறித்த தெளிவு, அளவாக்கள் மற்றும் கால அவகாசத்திற்கிடையேயான தொடர்பு என்பவற்றை புரிந்து கொள்வதற்காக விண்ணப்பதாரி ஒருவருக்குள்ள ஆற்றலை அளவிடல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

3. **பொது அறிவு**

தேசிய மற்றும் சர்வதேச சமகால முக்கியத்துவம் வாய்ந்த சமூக, கலாசார, அரசியல், பொருளாதார, மற்றும் தொடர்புடைய வேறு காரணிகள் தொடர்பாகவும், நூலகங்கள் மற்றும் நூலகத் துறை தொடர்பான பொது அறிவு தொடர்பாக விண்ணப்பதாரியின் அறிவு மற்றும் தெளிவு என்பவற்றை அளத்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

9-613

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.